# உடன்பிறப்பே...

92

நீரை.மகேந்திரன்

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கோ.சண்முகம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

ஓவியம் : ரவி பேலட்



# கோ.சண்முகம்

## திருப்பத்தூர் ‘முரட்டுத் தொண்டர்!’

1993-ஆம் ஆண்டுவாக்கில், கழகத்தினர் பலர் மீதும், பல இடங்களில் தாக்குதல்கள் நடைபெற்றன. கழகம் மீதும், கலைஞர் மீதும் தினமும் அவதூறுகள் பரப்பப்பட்டன. கலைஞருக்கு அவற்றைக் கையாள்வது ஒரு பொருட்டல்ல; ஆனால், கடைநிலைத் தொண்டர்களின் எதிர்வினை, களத்தில் வேறுவிதமாக இருக்கும். அதற்கு சாட்சியாக இன்றும் நினைத்துப் பார்க்கப்பட வேண்டியவர், திருப்பத்தூர் கோ.சண்முகம். ஆம், தனது தலைவர் குறித்து, ‘நாலாந்தர வசவுகளால்’ அவதூறு பரப்பிக் கொண்டிருந்த ஒரு பிரமுகரை அந்த மேடையிலேயே ஏறி, தாக்கி தனது முரட்டுத்தனமான கழகப் பற்றினைக் காட்டியவர். அதனால், கிடைத்த சிறைக் கொட்டடி, எதிர்த்தாக்குதல்கள் எல்லாம் அவருக்குப் பெரிதல்ல, திரும்பவும் அவதூறு மேடை போட்டால், அந்த இடத்துக்கு சண்முகம் வருவார் என்று எதிர்த்தரப்புக்குப் புரிய வைத்தார். அதுதான் அவரது இலக்கு.

‘எதற்கும் அஞ்சாநெஞ்சன், பார்க்கத்தான் முரட்டு மீசையுடன் தோற்றமளிப்பார். முரட்டுத் தொண்டர்தான், ஆனால், எளிமைக்கும், கட்டுப்பாட்டுக்கும் பெயர் போனவர்’ என கலைஞரால் பாராட்டப்பட்ட அன்பு உடன்பிறப்பு சண்முகம்.

### ஓட்டுநர் டூ சட்டமன்ற உறுப்பினர்

2001-ஆம் ஆண்டு கலைஞர் கைது செய்யப்பட்டபோது, இந்தியாவே பரபரப்படைந்த நேரத்தில், திருப்பத்தூர் வீதிகளில் கழகத்தினர் கொந்தளிப்புடன் களத்துக்கு வந்தனர். அப்போது உடல்நலக்குறைவாக இருந்த சண்முகத்தைக் கட்டுப்படுத்தி வீட்டுக்குள் பூட்டி வைத்திருந்தனர் உறவினர்கள். ஆனால், கதவை உடைத்துக் கொண்டு களத்துக்கு வந்துள்ளார். காத்திருந்த காவல்துறையினர், அவர் முன்னாள் எம்.எல்.ஏ. என்றும் பாராமல் தாக்குதல் நடத்தியதில், அவரது முன் பற்கள் அனைத்தும் உடைந்துவிட்டன. அத்துடனே சிறையிலும் அடைக்கப்பட்டார். இப்படி, திருப்பத்தூர் நகரில் கழகத்தை வளர்த்த களப்பணியாளர் சண்முகம்.

கழக உள்கட்சித் தேர்தல்களில் ஐந்து முறை நகரச் செயலாளராக இருந்தவர், மாவட்டக் கழகத் துணைச் செயலாளராக இருந்தவர். 1996-2001-ஆம் ஆண்டு கழக ஆட்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் எனப் பல பொறுப்புகளில் இருந்தவர். வாகன ஓட்டுநராக வாழ்க்கையைத் தொடங்கிய அவர், வார்டு பிரதிநிதி, கிளைச் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி எனப் படிப்படியாக அவரது கழக வாழ்க்கை உயர்ந்தது. எந்தப் பொறுப்பாக இருந்தாலும், அவர் கலைஞரின் அன்புக்குரிய முரட்டுத் தொண்டர் என்பதில்தான் பெருமிதம் அடைவார்.

### ‘வீரப்பன் மாதிரி’

திருப்பத்தூர் நகரில், 1943-ஆம் ஆண்டு பிறந்தவர் சண்முகம். தந்தை பெயர் கோவிந்தசாமி. தாயார் காமாட்சி அம்மாள். அவர் பள்ளியில் படித்த காலத்தில், அவரது சகோதரர்கள் திராவிடர் கழகச் செயல்பாடுகளில் தீவிரமாக செயல்பட்டுள்ளனர். அந்த அரசியல் செயல்பாடுகளை அருகிருந்து கவனித்த சண்முகம், இயல்பாகவே கழகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

1986-ஆம் ஆண்டு திருப்பத்தூர் இடைத்தேர்தலில் சண்முகம் அவர்களை நிறுத்தினார் கலைஞர். அப்போது சண்முகம் வெற்றிபெறவில்லை என்றாலும், அது கலைஞரின் கணக்கு என்பதை அறிவார். கலைஞரும் சண்முகத்தின் பணிகளை அறிவார்.

1996-ஆம் ஆண்டில் வேட்பாளராக்கி சட்டமன்ற உறுப்பினராக்கினார். அவர் எம்.எல்.ஏ.வாக இருந்த காலகட்டத்தில் வீரப்பன் பிரச்சினை தீவிரமாக இருந்த நேரத்தில், சண்முகத்தின் முரட்டு மீசையைப் பார்த்து சில நேரங்களில் ‘பார்க்க வீரப்பன் மீசை மாதிரியே இருக்கய்யா.. வீரப்பனைப் பிடிக்க உன்னை அனுப்பலாம்போல’ என சண்முகத்திடம் சொல்வார் தலைவர் என அவரது நினைவுகளைப் பகிர்ந்து கொள்கின்றனர் அவரோடு பணியாற்றிய கழகத்தினர்.

### கொடிமரமே அலுவலகம்

அவர் கிளைக் கழகத்தில் இருந்தபோது பேருந்து நிலையம் அருகே அவர் கழகக் கொடியேற்றி வைத்த, ஒரு துணிக்கடை வாசல்தான் சட்டமன்ற உறுப்பினராக ஆனபோதும் அவரது முகவரியாக இருந்தது

> **கழக மேடைகளில் இயல்பான மொழியில் அவர் ஆற்றும் உரை மக்களை ஈர்க்கும் எனக் கூறுகின்றனர் பகுதிக் கழகத்தினர். இஸ்லாமிய மக்கள் மத்தியில் அவர் கொண்டிருந்த செல்வாக்கு இப்போதும் கழகத்தின் அசைக்க முடியாத சொத்தாக உள்ளது.**

என்கின்றனர் கழகத்தினர். தினமும் மாலை நேரத்தில் அந்தக் கொடிமரத்தின் அருகே அவரைச் சந்திக்கலாம். ‘இங்கே எம்.எல்.ஏ. வருவாரென மக்கள் காத்திருப்பார்கள்’ என்கின்றனர். மக்களின் கோரிக்கை மனுக்கள், மருத்துவப் பரிந்துரைகளுக்கு அந்த இடத்தில் இருந்தே வேலைகளை முடித்துக் கொடுப்பார். மக்கள் வேறு, அவர் வேறு அல்ல; அந்த அளவுக்கு அணுகுவதற்கு எளிமையானவர் என்பதுதான் அவர் மீது இன்றும் மக்கள் கொண்டுள்ள எண்ணமாக உள்ளது.

கழகத்தில் அவர் இளைஞராக இணைந்த காலத்தில்தான், இந்தி எதிர்ப்பு உச்சத்தில் இருந்தது. அப்போது, வாடகைக் கார் ஓட்டுநராக இருந்த அவர், மூத்த முன்னோடிகளுடன் இணைந்து மறியல் போராட்டங்களில் பங்கெடுத்து சிறை சென்றார். மிசா சிறை வாசத்தின்போது தனது ஆறு பிள்ளைகளையும் உறவினர்களின் வீடுகளில் விட்டுச் சென்றுள்ளார்.

கழகம் முன்னெடுத்த ஈழத்தமிழர் ஆதரவுப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் என தலைமைக் கழகம் அறிவிக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் கழகத்தினரை அணி திரட்டுவதிலும், அவர்களைப் பங்கெடுக்க வைப்பதிலும் சண்முகம் அவர்கள் கொள்கைப் பிடிப்பு கொண்ட கழகவீரர். ‘வேலூர் மாவட்டக் கழகத்தின் போர்வாள்’ என நினைவினைப் பகிர்கிறார், ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டச் செயலாளராக இருந்த முகம்மது சகி அவர்கள்.

### கழகக் களம்

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில், மேற்குப் பகுதிகளில் கழகத்தின் செல்வாக்கைக் கட்டிக் காத்த பி.சுந்தரம், என்.கே.ராசா ஆகியோருடன் இணைந்து செயல்பட்டவர். பி.சுந்தரம் அவர்களுக்குப் பின்னர், நகரச் செயலாளராகப் பொறுப்பு வந்ததுடன், ஐந்து முறை அமைப்புத் தேர்தல்களில் வெற்றிபெற்று நகரச் செயலாளராக செல்வாக்குடன் திகழ்ந்தவர்.

கழக மேடைகளில் இயல்பான மொழியில் அவர் ஆற்றும் உரை மக்களை ஈர்க்கும் எனக் கூறுகின்றனர் பகுதிக் கழகத்தினர். இஸ்லாமிய மக்கள் மத்தியில் அவர் கொண்டிருந்த செல்வாக்கு இப்போதும் கழகத்தின் அசைக்க முடியாத சொத்தாக உள்ளது. குறிப்பாக, கழக உணர்வுடன் இளைஞர்களைக் களப்பணிக்கு தயார் செய்வதிலும் சண்முகம் வல்லவர்.

கடைநிலைத் தொண்டனும் அணுகக்கூடிய அளவுக்கு எளிமையான கழகப் பணியாளராகச் செயல்பட்ட சண்முகம் அவர்களின் மறைவு, யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத வகையில், 2002 ஆம் ஆண்டு, செப்டம்பர் 21-ஆம் தேதி அமைந்தது. அந்த நிகழ்வு அன்றைய ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகத்தின் மாபெரும் துயர நிகழ்வாக அமைந்தது. கழகத்தினருக்கு ஆறுதல் அளித்தது கலைஞரின் இரங்கல். முரட்டுப் பாசத்துக்குரிய அந்த கழகத் தொண்டரின் உண்மை உழைப்பினை காலம் மறக்காது, கழகம் மறக்காது.

**...துடிக்கும்**

## நூலகங்களும் தி.மு.க.வும்!

தி.மு.கழக இளைஞர் அணியின் சார்பாக, சட்டமன்றத் தொகுதிதோறும் 'கலைஞர் நூலகம்' அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை 92 தொகுதிகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டு, வாசகர்கள் பயன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. அரசியல், இலக்கியம், போட்டித்தேர்வுகளுக்கான நூல்கள் என ஆயிரக்கணக்கான நூல்கள் ஒவ்வொரு நூலகத்திலும் வைக்கப்பட்டுள்ளன. அடுத்தடுத்து அமையவுள்ள கலைஞர் நூலகங்களுக்கான நூல்களை வாங்க, இளைஞர் அணி நிர்வாகிகள், சென்னை புத்தகக் காட்சியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் நூல்களை வாங்க, ஒவ்வொரு அரங்காக ஏறி, இறங்கி பம்பரமாய் சுழன்று வரும், இளைஞர் அணி நிர்வாகிகளின் செயலைக் கண்டு ‘பியூர் சினிமா’ நூல் விற்பனையகத்தின் மோ.அருண் தனது முகநூல் பக்கத்தில் வியந்து எழுதியுள்ளார். “புத்தகக் காட்சியில் பியூர் சினிமா அரங்கில் தி.மு.கழக இளைஞர் அணியின் ஒரு பெரிய பட்டியலை நீட்டி, கலைஞர் நூலகத்திற்காக நூல்கள் வாங்கிச்சென்றனர். இளைஞர்களை வைத்து நூலகங்கள் தொடங்குவது, அதற்கு அவர்களையே புத்தகக் கொள்முதல் செய்ய வைப்பது அறிவுசார் செயல்பாடுகள். அதனால்தான் அறிவுடையார் விரும்பும் கட்சியாக இன்றும் தி.மு.க. இருக்கிறது” என்று பதிவிட்டுள்ளார்.

மேலும், “பேரறிஞர் அண்ணாவின் நூலகக் கொள்கையை, வாசிப்புப் பரவலாக்கத்தை தி.மு.க. இன்னமும் கைவிடவில்லை. வேறு ஏதேனும் கட்சியில் இருந்து இப்படிப் புத்தகக் காட்சிக்கு வந்து இதுவரை இப்படிப் புத்தகங்கள் வாங்கி இருக்கிறார்களா என்றால், இல்லை என்பதுதான் பதில். இப்படி நூலகங்களுக்காக இளைஞர்களே பட்டியலை எடுத்துக்கொண்டு வந்து, நேரடியாக புத்தகங்களைக் கொள்முதல் செய்வதன் வாயிலாக என் போன்ற சிறுபதிப்பாளர்களுக்கும் நேரடி வணிகம் நடக்கிறது” என்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

இளைஞர் அணியின் அறிவுச்செயல்பாட்டுக்குக் கிடைத்த வெற்றி இது.

## :ப்ளாஷ்பேக்





காசி வீரப்பன்

### புதுச்சேரியில் தலைவருடன்...

1994 -ஆம் ஆண்டு புதுவையில் நடைபெற்ற முன்னாள் புதுச்சேரி மாநில முதலமைச்சர், தி.மு.க. அமைப்பாளராக இருந்த டி.ராமச்சந்திரன் அவர்களுடைய மணி விழாவில், கலந்துகொள்ள தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். லபோர்தொனெ வீதியில் உள்ள வீட்டில் ஓய்வெடுக்கும்போது, எங்களை மட்டும் சந்திக்க அனுமதி வழங்கினார். அப்போது புதுவை அரியாங்குப்பம் தொகுதி இளைஞர் அணியின் செயலாளராக நோணாங்குப்பம் காசி வீரப்பன் ஆகிய நான் பணியாற்றினேன். என்னுடன் எனது தம்பிகள் தேசிங்கு மற்றும் கருணாகரன் ஆகியோரும் தலைவர் கலைஞருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டோம். மறக்க முடியாத புகைப்படம் இது.

**– காசி வீரப்பன், செயலாளர்,**
**நோணாங்குப்பம், புதுச்சேரி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சோதிடம் பொய்த்தது!

1969-இல் முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சரானவுடன் நகராட்சித் தேர்தலை நடத்தினார். 73 நகராட்சிகளுக்கு நடைபெற்ற தேர்தலில், தி.மு.கழகம் 47 இடங்களிலும், கூட்டணிக் கட்சிகள் 3 இடங்களிலும் வென்றன. அதற்காக அண்ணாவின் நினைவிடத்தில் 50 மலர்ச்செண்டுகளை வைத்து மரியாதை செலுத்தினார் கலைஞர். அண்ணாவுக்குப் பின் தி.மு.க. சிதையும் என்ற சோதிடம் பொய்த்தது என இந்தியன் எக்ஸ்பிரஸும், திசை திரும்பிய காலக்காற்று தெளிவாக வீசுகிறது என்று மெயில் ஏடும் எழுதின.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

717

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131